பொது (சட்டம் (ம) ஒழுங்கு.சி)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

## அறிவிப்பு

தமிழ்நாட்டில் மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு சிறப்பாக சேவை செய்துவரும் ஒருவருக்கு ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், **"கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்"** குடியரசு தின விழாவின்போது வழங்கப்படுகிறது. ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)க்கான காசோலை, ஒரு பதக்கம் மற்றும் தகுதியுரை ஆகியவை இதில் அடங்கும். மத நல்லிணக்கத்திற்காக சேவை செய்துவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் இப்பதக்கத்தினைப் பெறத் தகுதியுடையவராவர். இப்பதக்கம் பெற வயது வரம்பு ஏதுமில்லை.

2. வரும் 26.01.2024 அன்று குடியரசு தின விழாவின்போது வழங்கப்படவுள்ள பதக்கத்திற்குத் தகுதியானவரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் (Applications) மற்றும் அவை தொடர்பான ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது https://awards.tn.gov.in என்ற இணைய தளம் மூலமாகவோ அரசு செயலாளர், பொதுத் துறை, தலைமைச் செயலகம்–600 009 சென்னை அவர்களுக்கு 15.12.2023–க்கு முன்பாக அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.01.2024 குடியரசு தினத்தன்று பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

க.நந்தகுமார்,
அரசு செயலாளர்.

254157/2023

PUBLIC (LAW & ORDER.C) DEPARTMENT,
SECRETARIAT, CHENNAI-600 009.

**NOTIFICATION**

The Government of Tamil Nadu has instituted an award by name **"KOTTAI AMEER COMMUNAL HARMONY AWARD"** and it is presented to a person who has done outstanding services to promote Communal harmony in Tamil Nadu by the Hon'ble Chief Minister during the Republic Day Celebrations. The award consists of a medal, a Demand Draft of Rs.25,000/- and a Certificate. Those who have done outstanding services to promote Communal harmony are eligible for this award and there is no age limit for the award.

2. The nominations are called for 'Kottai Ameer Communal Harmony Award' for the year, 2024. The nominations accompanying relevant documents for the outstanding services to promote Communal harmony should reach the Secretary to Government, Public Department, Secretariat, Chennai-600 009 along with the recommendations of the District Collector concerned or through online mode https://awards.tn.gov.in on or before 15.12.2023. The applications which are not received within the prescribed time will be rejected. The awardee will be selected by the Selection Committee constituted by the Government. The medal will be presented to the awardee by the Hon'ble Chief Minister during the Republic Day Celebrations on 26th January, 2024.

**K.NANTHAKUMAR,**
**SECRETARY TO GOVERNMENT.**